VisAbility

Art - Education - Social Change

20 துரநெ 2017

# மாற்றுத்திறனாளிகள் எதிர் நோக்கும் தடைகளை உடைத்தெறிவோம்

## மாற்றுத்திறனாளிகளுக்கான வலுவூட்டும் நடன நிகழ்வுகள்

எமது வாழ்நாள் முழுவதும் ஒரு வீட்டிற்குள் முடங்கிக்கிடப்பது என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? அல்லது தொழிலில் ஈடுபடுவதிலிருந்து தூரப்படுத்துதல் தொழிற் பயிற்சியில் ஈடுபடுவதை ''உன்னால் முடியாது'' என்பன போன்ற வார்த்தைகளால் தடுத்தல் என்பவற்றை நினைத்துப்பார்க்க உங்களால் முடியுமா? அவ்வாறான தருணங்களை நீங்கள் இதுவரை உணர்ந்திருக்காவிடில், ஸ்ரீலங்காவில் கிட்டத்தட்ட 10 % ஆகக் காணப்படும் தமது வாழ்நாளில் ஒரு தடவையாவது மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கு முகம் கொடுத்தவராக உள்ள மாற்றுத்திறனாளிகளிகளிடமிருந்து நீங்கள் வேறுபட்டவராகின்றீர்கள். தற்போது கேள்வி என்னவெனில் இத்தகைய பாரபட்சத்தையும் அபிப்பிராயத்தையும் வென்று சமூகத்தில் இம்மாற்றுத்திறனாளிகள் ஏனையோரைப் போல கௌரவமாகவும் தன்னம்பிக்கையுடன் வாழ என்ன செய்யலாம் என்பதாகும்.

ஸ்ரீலங்காவில் காணப்படும் நம்பிக்கையின் பிரகாரம் மாற்றுத்திறனாளியாகவுள்ள தனி நபரொருவர் ஏனையோருக்கு பாரமாக இருப்பதில்லை. மாறாக ஒரு மாற்றுத்திறனாளி நபரை ஒதுக்குவதாலும், அவமானப்படுத்துதல் போன்ற காரணங்களால் அவர் பயனற்றவர் என்ற நிலைக்கும், ஒரு பலமோ பெறுமதியோ இல்லாதவர் என்ற நிலைக்கும், தள்ளப்படுகின்றார். ஒரு மாற்றுத்திறனாளி பாடசாலைக்கல்வி, வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சியில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் என்பன மறுக்கப்படும் போது, இந்நடவடிக்கை அவரைத் தனிப்பட்ட ரீதியிலும், வெரது குடும்பத்தவரையும் சமூக ரீதியிலும் மாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. உளரீதியாக அல்லது உடல்ரீதியாக வேறுபட்டிருத்தல் அதாவது வித்தியாசமானவராக இருத்தல் என்பது ஒரு துரதிர்ஷ்டமான விடயமல்ல. அது சமூகத்தில் ஒவ்வொருவரும் புதிதாய் யோசிப்பதற்கும் மற்றும் ஒவ்வொருவரிடமும் அமைந்துள்ள திறமைகளைப் புரிந்து கொண்டு அங்கீகரிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். உண்மையில் சமூகம் தன்னில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு மாற்றுத்திறனாளிகளின் கல்விக்கும், வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சியில் பங்கு கொள்ளும் வாய்ப்பினை ஏற.படுத்துவதன் மூலமும் அதற்கான ஆதரவினை வழங்குவதன் மூலமும் மாற்றுத்திறனாளிகள் தமது சுதந்திரமான வாழ்க்கையை வாழ்வதோடு, சமூகத்தின் அபிவிருத்திக்கும் நன்மைக்கும் பங்களிப்புச் செய்வர்.

''மாற்றுத்திறனாளிகள் எதிர் நோக்கும் தடைகளை உடைத்தெறிவோம்'' என்னும் திட்டமானது, மாற்றுத்திறனாளிகளுக்கான வலுவூட்டும் நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம் அவர்களை வலுப்படுத்துவதுடன் அவர்களின் இயல்பான திறமையை வெளிக் கொணரவும் முடியும். இந்நிகழ்வுகள் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் 26 ஜூன் இலிருந்து 02 ஆகஸ்ட் 2017 வரையிலான காலப்பகுதியில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் பாரபட்சமாக நடாத்தப்படுவதிலிருந்தும் அவர்களை ஒருங்கிணைத்துக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் இப்பயிற்சிப்பட்டறை வித்தியாசமான அணுகுமுறையில் முன்னெடுக்கப்படும். மாற்றுத்திறனாளிகளின் உரிமை பற்றி அறிவூட்டும் நிகழ்வாகவும், நடன நிகழ்வினையும் இணைத்து நடாத்தப்படும். மேலும் மாற்றுத்திறனாளிகளுடன் மாற்றுத்திறனாளிகள் அல்லாதோரையும் இந்நிகழ்வில் இணைத்துக்கொள்ளும் போது, மாற்றுத்திறனாளிகள் பற்றிய தப்பபிப்பிராயம் இல்லதொழிக்கப்படும்.

நடிப்பாற்றலை வலுவூட்டுதல் நிகழ்வுகள் ''VisAbility'' எனும் ஜேர்மனிய இலாப நோக்கற்ற நிறுவனம் மூலம் இலங்கை ஜேர்மனிய நாடுகளைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுடன் மாற்றுத்திறனாளிகள் அல்லாதோரையும் இணைத்து நடாத்தப்படும் ஒரு நிகழ்வாகும். இந் நிகழ்வுகள் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் கலப்பு நடனமாகவும் மாற்றுத்திறனாளிகளின் உரிமை பற்றிய பயிற்சிப்பட்டறையாகவும் இருக்கும். இப்பயிற்சிப்பட்டறைகள் ஒவ்வொரு நகரத்திலும் மூன்று பொது நடன நிகழ்வுடனும் இந்நடன நிகழ்வுகளை வழி நடாத்திச்செல்லும் குழு தனித்துவமானது.

கலப்பு நடனம் **கெர்த கொனிக்** (**Gerda Konig**) அவர்களாலும் **எரங்க உமகிலிய** அவர்களாலும் நடாத்தப்படும். கெர்த கொனிக் அவர்கள் இலங்கையிலும் வேறு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் கலப்பு நடனத்தினைத் திட்டமிட்டுச் செய்து சிறந்த பெயர் பெற்ற ஜேர்மனியநாட்டவராவார்.(அவரும் சக்கர நாற்காலியில் செல்லும் மாற்றுத்திறனாளியாவார். **திரு உமாகிலிய** இலங்கை நாட்டைச் சேர்ந்த நடன வல்லுனரும், நடனப்பயிற்சி வழங்குபவரும், "மீரங்க பைன் ஆர்ட்ஸ் என்செம்பிள்" (Meranga Fine Arts Ensemble) நிறுவனத்தின் பணிப்பாளருமாவார். அதேவேளை மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமை பற்றிய பயிற்சிப்பட்டறைகள் Global South இல் மாற்றுத்திறனாளிகள் பற்றிய புலமைசார் ஆலோசகரான **ஹெலன உல்ரிக் மராம்பியோ (Helena –Ulrike Marambio)** அவர்களாலும் ஸ்ரீலங்காவைச்சேர்ந்த சட்டத்தரணி நிர்மா கருணரத்னவாலும் ˙(Nirma Karunarathna) நடாத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகள் எதிர் நோக்கும் தடைகளை உடைத்தெறிவோம் எனும் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான வலுவூட்டும் நடன நிகழ்வுகள் German Federal Foreign Office, Schmitz Stiftungen and the Arts and Humanities Research Council in the United Kingdom (UK) என்பவர்களின் அனுசரணையுடன் நடாத்தப்படுகின்றது. அத்துடன் கிழக்குப்பல்கலைக் கழகத்தின் விபுலானந்த இசை நடனக்கல்லூரியும் அமெரிக்கன் மிஷன் தேவாலயமும் ஆதரவு வழங்குகின்றன.

## வலுவூட்டும் நடன நிகழ்வுகள் - மட்டக்களப்பு (26 ஜூன் - 2 ஜூலை 2017)

**சுவாமி விபுலாநந்த நடனக்கல்லூரி கிழக்குப்பல்கலைக்கழகம்.**

| | |
|---|---|
| கலப்பு நடனப் பயிற்சிப் பட்டறை - | 26,27,29 ஜூன், 1 ஜூலை 2017 |
| மாற்றுத்திறனாளிகள் உரிமை பற்றிய பயிற்சிப் பட்டறை - | 28 ஜூன் 2017 |
| நகரத்தில் Flashmob | 30 ஜூன் 2017 |
| நடன நிகழ்வுகள்(SVIAS-கிழக்குப்பல்கலைக்கழகம்,செங்கலடி) | 2 ஜூலை 2017 |

இது பற்றிய மேலும் தகவல்களுக்கு கீழ்க்குறிப்பிட்ட நபர்களைத் தொடர்பு கொள்ளவும்.

மஹேஷ் எரங்க உமாகெலிய
-தேசப் பிரதிநிதி
(சிங்களம் தமிழ்),
தொடர்பு – 94 777637572
இ-மெயில் - maheshumagiliya @gmail.com

ஆனந்த விஜய நெடியதத்த
-தேசப் இணைப்பாளர்
(சிங்களம் தமிழ்),
தொடர்பு – 94 728509899
இ-மெயில் - vijaya.nediyadaththa @gmail.com

VisAbility e.V
c/o Sebastian Potthof
Weichselplatz 6
12045 Berlin
www.visability.social
info@visability.social